1979 ஏப்ரல் 26]

திரு. செ. சிவசாமி : தலைவரவர்களே, அந்த பணிபுரியும் ஆயாக்களுக்கு வருடத்திற்கு இரண்டு வெள்ளைப் புடவைகள் (ட்ரெஸ்) கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : முதலிலே சம்பளத்தைக் கவனிப்போம்.

குன்னூர் நகர 'மார்க்கட்'

*வினா எண். 831—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் நகரத்தில் ஆற்றின் அருகில் அமைந்துள்ள மார்க்கட் பகுதி மழைக் காலங்களில் வெள்ளத்தினால் சேதம் ஏற்படுவது அரசிற்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) ஆம்,

(ஆ) இந்த பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வுகாண குன்னூர் நகராட்சி ஆணையரிடம் அறிக்கை வரப்பெற்று, அரசின் ஆய்விலுள்ளது.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவரவர்களே, மேற்படி இடம் குன்னூர் நகரில் ஆற்றின் மையத்தில் ஓரத்தில் இருக்கிறது. ஆற்றின் மையத்தில், ஓரத்தில் இருப்பதால் பெருவெள்ளம் ஏற்படும்போது, மழைநீர் மார்க்கெட்டுக்குள் புகுந்து சேதம் ஏற்படுகிறது. ஆகவே, நகர மக்களுக்கு வசதியாக இருக்கக்கூடிய ஒரு இடத்தில் அந்த மார்க்கெட்டை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, இந்த வெள்ளத்திலிருந்து சேதம் ஏற்படாமலிருக்க முதலில் முயற்சி எடுக்கப்படும். அதை அரசு எடுத்து வருகிறது.

மதுரை நகருக்குக் குடிநீர் வழங்கல்

*வினா எண். 832—திரு. வ. மு. சுப்பிரமணியம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை நகருக்குப் போதிய குடிநீர் வசதி ஏற்படுத்தும் வகையில் விரைவுத் திட்டம் ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளதா?